**திரு. வே. தங்கபாண்டியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோவியத் நாட்டில் எம்.பி.பி.எஸ். படித்துவிட்டு தமிழகத்திற்கு வந்து நிதியுதவியோடு ஹவுஸ் சர்ஜியன் பயிற்சி பெற வேண்டும் என்ற கோரிக்கை இருந்தாலும் கூட அண்டை மாநிலங்களில் இருந்து எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றுவிட்டு வந்து நம்முடைய மாநிலத்தில் ஹவுஸ் சர்ஜியன் பயிற்சிக்கு மனு செய்கிறபோது இங்கே மறுதலிக்கப்படுகிறது. நிதியுதவி இல்லாமலே படிக்கிறோம் என்று சொன்னாலும் கூட மறுப்பு தெரிவிக்கிறபோது வெளிநாட்டிலிருந்து படித்து விட்டு வருகிற காரணத்திற்காக மட்டும் இவர்களுக்கு ஏன் இந்தச் சலுகை கொடுக்கவேண்டும் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கவில்லை என்றுதான் பதில் சொல்லி இருக்கிறேன்.

நடமாடும் தொழுநோய் மருத்துவப் பேருந்து.

* *1701*—**திரு. ஏ. ஜி. சம்பத்** :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் தொகுதி கிராமங்களில் நடமாடும் தொழு நோய் மருத்துவப் பேருந்து அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படத் தொடங்கும் ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*10-10* மணி.

**திரு. ஏ.ஜி. சம்பத்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் வட்டத்தில் குறிப்பாக முகையூர் தொகுதியில் தொழுநோயாளிகள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அரகண்டநல்லூரில் அமைந்திருக்கிற மருத்துவமனைக்கு வந்து செல்வது என்பது மிகவும் கடினமாக இருக்கிறது. *1971–72*–ல் கழக ஆட்சி இருந்த நேரத்தில், இப்படி பேருந்து. அந்த இடத்தில் அமைக்கப்பட்டு, அதிலே மொபைல்ஹாஸ்

ஹாஸ் பத்திரி மூலமாக கிராமங்களுக்குச் சென்று அவர்களுக்கு மருந்துகள் வழங்குவது வழக்கமாக இருந்தது. அது இடையில் நிறுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே அங்கே மருத்துவ மனைப் பேருந்துகளை ஏற்படுத்தி அதன் மூலமாக அந்த கிராமங்களுக்குச் சென்று மருந்துகளை வழங்குகிற திட்டம் இருந்தால் அவர்களுக்கு அது வசதியாக இருக்கும். எனவே அதை அரசு பரிசீலனை செய்து அந்த மொபைல் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அரகண்டநல்லூர், முகையூர் தொகுதியில் தான் இருக்கிறது. அவருடைய தொகுதியில் தான் அந்த மருத்துவமனை இருக்கிறது. மேலும் முகையூரில் உள்ள தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையம் விழுப்புரம் மருத்துவமனையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அதிலே மருத்துவ அதிகாரி, மருந்தாளுநர், தொழுநோய் ஆய்வாளர், தொழில் நுட்ப உதவியாளர்கள், ஆண் செவிலியர் அடங்கிய மருத்துவக் குழு முகையூர் தொகுதிக்குச் சென்று மருத்துவ அதிகாரியுடன் கண்காணிப்பின்கீழ் தொழுநோயாளர்களைத் தொடர்ந்து ஆய்ந்து மருந்துகளைக் கொடுத்து வருகிறார்கள். உறுப்பினர் அவர்கள் அதனுடைய நடைமுறையை விரிவுபடுத்த வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். அரசு அதைக் கருத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஜி. சம்பத் :** துணைத் தலைவர் அவர்களே கிராமங்களுக்குச் சென்று ஆய்வு நடத்துகிற நேரத்தில், டாக்டர்கள் செல்வது கிடையாது, லெப்பரசி இன்ஸ்பெக்டர்கள் செல்கிறார்கள் என்ற குறைபாடு அங்கே இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** குறைபாடுகளை குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டினால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து நாட்டிலிருந்து, பூரணமாக ஆப்பரேஷன் செய்கிற அவ்வளவு வசதிகளையும் கொண்டு நடத்தப்படும் மொபைல் டிஸ்பென்சரி போன்ற வாகனங்கள் வாங்கப்பட்டன. அவைகளில் நான்கு வாகனங்கள் இன்றைக்கும் சென்னை பொது மருத்துவமனை வளாகத்திலேயே பயனற்றுக் கிடக்கின்றன. நாங்கள் நேரிலேயே பார்க்கிறோம். இப்படி எங்கெங்கே பேருந்துகள் இருக்கிறதோ அவைகளை. இவைகளுக்குப் பயன்படுத்துவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; இது குறித்த விவரம் என்னிடத்தில் இப்போது இல்லை. தனிக்கேள்வி எழுப்புவார்களானால் விவரமாகப் பதில் அளிக்கப்படும்.

திரு. வ. அன்பழகன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பாக ஸ்பானிஷ் அரசாங்கத்தால் தமிழ்நாட்டில் எங்கெங்கே தொழு நோயாளிகள் இருக்கிறார்கள் என்ற ஒரு சர்வே செய்யப்பட்டு, அதிலே சேலம் மாவட்டத்தில் தான் அதிகமாக தொழு நோயாளிகள் இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு அடுத்ததாக தென்னாற்காடு மாவட்டத்திலும் தொழுநோயாளிகள் இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. சேலத்தில் முழுவதுமாக தொழு நோய் அகற்றப்பட்டு விட்டது. தென்னாற்காடு மாவட்டத்திலும், 'டானிடா' திட்டத்தின்கீழ் தொழு நோயை ஒழிக்கும் திட்டத்தை அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறதா அல்லது கொண்டு வரும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் முழுவதுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. உறுப்பினர் அவர்களுடைய கருத்தை மேலும் அரசு பரிசீலிக்கும்.

கன்னியாகுமரிக்குக் குடிநீர்த் திட்டம்.

* 6505 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரியில் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரியில் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்க குடிநீர்த் திட்டம் எதுவும் தற்சமயம் ஆய்வில் இல்லை.